# ஆண்டாள் பிரியதர்ஷினியின் எழுத்தாளுமை

முனைவர் ச.மணிமேகலை,

*உதவிப் பேராசிரியர்,*

*தமிழ்த்துறை,*

*டோக் பெருமாட்டி கல்லூரி,*

*மதுரை-2*

### முன்னுரை:

காலம் காலமாகப் பெண்கள் ஒடுக்கு முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இந்நிலையை மாற்ற இலக்கியங்கள் துணைநிற்கின்றன. பெண்களே தங்களது மொழியில் பெண்களின் பிரச்சினைகளை எடுத்துரைக்கும் நிலைப்பாடு அதிகளவில் இக்கால இலக்கியங்களில் உருவாகியுள்ளது. அந்த வகையில் ஆண்டாள் பிரியதர்ஷினி எழுதிய 'சரஸ்வதியின் ஆயுத எழுத்து' என்னும் கவிதைநூல் அமைந்துள்ளது. அந்நூலின் வழி ஆண்டாள் பிரியதர்ஷியின் எழுத்தாளுமையை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

### ஆளுமை- விளக்கம்:

இ.டபிள்யுஆல்போர்ட் என்பவர் ஆளுமை பற்றிவிளக்கிய அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். இவர் ஆளுமையின் அடிப்படைக்கூறுகளாகத் "தனிப்பட்ட தோற்றம், அறிவுக்கூர்மை, உணர்வாற்றல், சமூகமயமாதல், நேர்மையானஒழுக்கமதிப்புகள்" (ச.மணிமேகலை, கவிஞர்மீராவின் படைப்பும் ஆளுமையும், ப.47) முதலியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இவர் கூறியுள்ளதன் அடிப்படையில்; ஆண்டாள் பிரியதர்ஷினியின் சமூகமயமாகும் பண்பு அவரது எழுத்தாளுமையில் எங்ஙனம் வெளிப்பட்டுள்ளது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### குறியீட்டாளுமை:

குறியீடுகள் மனித வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ளன. சொல்லவரும் கருத்தை நேரடியாகச் சொல்லாமல் வேறொன்றின் வழிவெளிப்படுத்தும் போது கவிதைநயம் மேலோங்கித்திகழ்வதை அறியலாம். மனித அறிவோடும் உணர்வோடும் தொடர்புடைய அனைத்துத்துறைகளிலும் குறியீடுபயன் படுத்தப்படுகின்றது. சொற்களின் கைகாட்டலுக்குக் காத்திராமல் கவிஞன்

வெளிப்படுத்தும் பொருளானதுவாசகனுக்கு நேரடியாகச் சென்று அடையும் முயற்சி குறியீட்டியல் என்னும் இலக்கிய முயற்சியாகும். மொழியின் மூலம் பேசாமல் வழக்கில் உள்ள பொருட்களைக் காட்டி அவை விளைவிக்கும் தொனியில்வாசகனே பொருளைப் புரிந்து கொள்ளும் வகையில் வழக்குக்குறியீடுகளைப் பயன்படுத்துவதில் ஆண்டாள் பிரிதர்ஷினி தனித்துவம் வாய்ந்தவராகிறார். வழக்குக் குறியீடுகளைத் “தொன்மம், சமயம், வரலாறு, இலக்கியம், வாழ்க்கை அல்லது சமூகம்” (அப்துல்ரகுமான், புதுக்கவிதையில் குறியீடு, ப.69) என அப்துல்ரகுமான் பிரிக்கின்றார். இக்குறியீடுகள் ‘சரஸ்வதியின் ஆயத எழுத்து’ என்னும் கவிதை நூலோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன.

### தொன்மக் குறியீடுகள்:

இயற்கைக் குறியீடுகளுக்கு அடுத்த நிலையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பது தொன்மக் குறியீடுகள் ஆகும். இந்திய நாட்டுத் தொன்மவளமும், அத்தொன் மங்கள் நெடுங்காலமாக மக்கள் உணர்வுகளோடு கொண்டுள்ள ஆழ்ந்த உறவும் இதற்குக் காரணமாகும். “இந்தியத் தொன் மங்கள் இக்காலத்து உணர்வுகளையும், சிக்கல் களையும் வெளிப்படுத்து வதற்கேற்ற மூலமாதிரிகள் பலவற்றைக் கொண்டுள்ளன” (அப்துல்ரகுமான், புதுக்கவிதையில் குறியீடு, ப.69) தொன்மவடிவங்கள் பெண்களைக் காணுகின்ற முறை வேறு. நடப்பியலில் பெண்களின் நிலைப்பாடு வேறு. அதனை வெளிப்படுத்தும் விதத்தில் கல்வி அறிவைத்தரும் தெய்வமாக சரஸ்வதி உருவாக்கப்பட்டுள்ளாள். நடப்பியலில் பெரும்பாலான பெண்களுக்குக் கல்வி என்பது எட்டாக்கனியாக உள்ளது என்பதை வெளிப்படுத்தும் நோக்கில் கவிஞர்சக்தியின் வடிவமாகிய சரஸ்வதி என்னும் தொன்மக்கதா பாத்திரத்தைக் குறியீடாக்கியுள்ளார். ஆயுத எழுத்துத் தனித்து இயங்கும் ஆற்றல் அற்றது. அதேபோல் பெண்களும் தனித்து இயங்கும் ஆற்றல் அற்றவர்கள் என்பதை எடுத்துக்கூற ஆயுதஎழுத்தையும் இணைத்து நூலுக்குக் குறியீடாக் கித்தலைப்பிட்டுள்ளார்.

தொலைக்காட்சியும் அலைபேசியும் இயல்பான வாழ்க்கை நிலைப் பாட்டிலிருந்து மாற்றி அமைக்கின்றன. இதனை வெளிப்படுத்துவதற்கு ‘சகுனியாகின்றன தொலை பேசி அலை பேசி’ (ப.67) என ‘சகுனி’ என்னும் கதாப்பாத்திரத்தைத் தொலை பேசி, அலை பேசிக்குக் குறியீடாக்கியுள்ளார்.

### சமயக் குறியீடுகள்:

கடவுள் என்றால் உயரியவர். அவர்நினைத்தால்இவ்வுலகைஎன்னவேண்டுமானாலும்செய்துகொள்ளலாம்; எனக் கற்பிதம் உள்ளது. ஆனால் அந்தக்கடவுளே என்றாலும் இந்தப்பூவுலகில்வாழ அடையாள அட்டை வேண்டும். அந்த அளவிற்கு சமுதாயத்தில் அடையாள அட்டை

முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. கடவுளாக இருந்தாலும் முறையான அடையாள அட்டை வேண்டும் என்பதை எடுத்துரைக்க

“சங்குசக்கரம் மயில்மயிலிறகு
சிலுவை, எண்தகடு இன்ன பிற
எல்லாம் காட்டினும்
ஒப்புதல் இல்லை
சரஸ்வதிக்கு” (ப.67)

எனச் சமயம் சார்ந்த குறியீடுகளைப் பயன் படுத்தி அடையாள அட்டையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளர்.

### வாழ்க்கை அல்லது சமூகம் சார்ந்த குறியீடுகள்:

உணவுப் பழக்கவழக்கங்களில் பதப்படுத்தி உண்ணும் முறை இன்றைய காலகட்டத்தில் அதிகமாகப் புழக்கத்தில் உள்ளது. காய்கறிகளையும் பழங்களையும் நேரிடையாகப் பறித்து உண்ணும் காலம் மாறி அவற்றின் மீதுவேதிப்பூச்சு செய்து மாதக்கணக்கில் பாதுகாத்துவைத்திருந்து அதை மனிதர்கள் பயன் படுத்திவருகிறார்கள். இதனை வெளிப்படுத்து வதற்குக் ‘காய்கறி பழப்பிணங்கள்’ (ப.60) எனப்பிணத்தைக் குறியீடாக்கியுள்ளார். அதன் செழிப்பு இழந்தநிலையில் அதை உண்பவர்களுக்குப் பயன் இல்லை. அதனால் கேடு உருவாகும் என்பதைத்தெளிவு படுத்துவதற்காகப் பிணத்தைக் குறியீடாக்கியுள்ளார்.

மேலும் குப்பைத் தொட்டிகளில் கொட்டப்படும் பொருள்களை மனிதர்களின் மனத்திற்குக் குறியீடாக்கியுள்ளார்.

“அவரவர் வீட்டுக்

குப்பைக் கூடையில் தெரிகிறது

அவரவர் முகம்” (ப. 13)

எனக்கவிதை தொடங்குகின்றது. அக்குப்பைக் கூடைகளில் ‘ஒற்றைவார்த்தைக் காகத் தேடித்தேடி எழுதி எழுதிக் கசக்கிப் போட்ட கவிதை உருண்டைகள் ஒரு கூடையில், கடைசிச் சொட்டுவரை உறிஞ்சித்தீர்த்தகுவார்ட்டர் பாட்டிலும் போதைவஸ்துவும் ஒரு கூடையில், அடையாளம் தெரிகிறது குப்பைகளையும் குப்பைக்கூடைகளையும். ஆனால் மனசு நிறைந்த குப்பையை எந்தக் கூடையில் போட? குப்பையில் தொலைத்த மனசை எந்தக் கூடையில் தேட?’ மனம் தீய எண்ணங்களால் நிறைந்திருப்பதைக் குப்பைகளாகக் குறியீடாக்கிக் காட்டியுள்ளார்.

### இலக்கியம் சார்ந்த குறியீடுகள்:

ஆண்கள் தாங்கள் நினைத்ததைச் செய்து கொள்கிறார்கள் என்பதைத்தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற உயிரெழுத்து மெய்யெழுத்தை

“‘அ’ னாவிலும் ஆரம்பிக்கிறது
‘ஆ’ வன்னாவிலும் ஆரம்பிக்கிறது
உயிரெழுத்து மெய்யெழுத்து
உயிர்மெய்யெழுத்து
எதில் வேண்டுமானாலும்
ஆரம்பித்து விடுகிறது” (ப.5)

எனக் குறியீடாக்கிக் காட்டியுள்ளார். பெண்களை மௌன மொழியாளாக்கிச் செயல் பாடற்றவர்களாக மாற்றப் பட்டுள்ள சூழலை

“மௌனமே ஆயுதம் என்பதாலும்
வேடிக்கை பார்க்கிறது
ஆயுத எழுத்து
என்ன நடந்தாலும்
எப்போது நடந்தாலும்” (ப.6)

என்கிறார். பெண்கள் ஆண்களைச் சார்ந்து மௌனத்தை ஆயுதமாகக் கொண்டு எதையும் எதிர்த்துக் கேட்டு சுதந்திரமாகவாழ இயலாதவர்களாக உள்ளனர். தமிழ் எழுத்துக்களின் பிறப்பில் தலையைப் பிறப்பிடமாக் கொண்டு பிறக்கும் ஆயுத எழுத்தைப் பெண்களது செயலாற்ற இயலாத நிலைக்குக் கவிஞர் குறியீடாக்கியுள்ளார்.

**அணிநயம்:**

கவிஞர் புகழாப் புகழ்ச்சியணியைக் கையாண்டு விவசாயிகளின் நிலையையும், அதன் பக்கம் சாராத இளைஞர்களின் பகட்டான வாழ்க்கை முறையையும் புகழ்வது போல இகழ்ந்து கவிதையாக்கியுள்ளார். “வரப்பில் நடக்கத்தெரியாமல் நடந்தாள். பாதத்தில் அப்பிய சேறு அருவருப்புத்தந்தது. விவசாயிகளைக்காணும் போது அவளுக்கு நாத்தம் புடிச்சமனுசங்க எனவும் சீக்கிரம் பார்லர்போயி மசாஜ்பண்ணனும், உடம் பெல்லாம் அழுக்கு” (ப.59) எனக்கருதுகின்ற எண்ணப் போக்கு உள்ளது. இக்காலப் பெண்களிடம் உள்ள செயற்கை அழகுபடுத்துதல், விவசாயிகளின் உழைப்பின் தன்மையைப் புரியாமல் இருத்தல் போன்றவற்றை எடுத்துக் கூறுவதற்குப் புகழாப் புகழ்ச்சியணியைக் கையாண்டுள்ளார்.

**உவமையணி:**

கவிதை சிறப்பதற்குச் செய்யும் முயற்சிகளில் உவமையைப்பயன் படுத்துதல் என்பது முக்கியப் பங்குவகிக்கின்றது. அந்த வகையில் கவிஞர் இக்கால கட்டத்தில் பேச்சு வழக்கில் உள்ள ‘மாதிரி’ என்னும் உவம உருபைப்பயன்

படுத்தியுள்ளார். விவசாய நிலம் சேறும் சகதியும் நிறைந்தது. அந்நிலத்தில் நடக்கும் இக்காலப் பெண் மலத்தில் கால்வைத்தது போல் உணர்கிறாள் எனக் கவிதையை அமைத்துள்ளார். இக்கவிதை இன்றைய தலைமுறையினரின் மனப்பாங்கை வெளிப்படுத்துகின்றது.

"இயற்கை உரத்தின் நாற்றமும் பிடிக்காமல்
கழைக் கூத்தாடியது மனசு
மலம்மிதித்த மாதிரி" (ப.58)

புனிதமாகக்கருத வேண்டிய விவசாய நிலம் எங்ஙனம் பார்க்கப்படு கின்றது என்பதை மனிதக்கழி வோடு சேற்றை ஒப்பிட்டுக் கூறியிருப்பது சொல்ல வரும் கருத்தை அழுத்த மாக்கித்தந்துள்ளது.

**தொடை நயம்:**

செய்யுளின் நடையைச் சிறப்புற ஆக்கித்தருவது தொடை நயம். கவிஞர்எதுகை, மோனை, முரண், இயைபு ஆகிய தொடைகளைப் பயன் படுத்திக் கவிதைகளையாத்துள்ளார். எதுகையும் மோனையும் இயைந்து முதலடியில் வந்தசொல்லே அடுத்த அடியிலும் வரும் வகையில் பெரும் பாலான கவிதைகளை அமைத்துள்ளார்.

"பேச்சு இல்லாத
பேச்சுப் பொழுதுகள்
மௌனம் இல்லாத
மௌனப் பொழுதுகள்
புன்னகை இல்லாத
புன்னகைப் பொழுதுகள்" (ப.9)

எனவந்த சொற்களை மீண்டும் பயன் படுத்தி பெண்களிடம் புறத்தில் இல்லாது ஆனால் அகத்தில் மண்டிக்கிடப் பவற்றை எடுத்துக் காட்டுகின்றார். அதே போல் 'சரஸ்வதிக்குத் தேவை' என்னும் கவிதையில் "ஒரு தேநீரில் இருக்கும், ஒரு தித்திப்பில் இருக்கும், ஒரு தோசையிலும் கூட இருக்கும், ஒரு குறுஞ்சேதியிலும்" (ப.28) என 'ஒரு' என்னும் சொல்லை எட்டுவரிகளில் கையாண்டு 'அவளுக்குத் தெரியும் கட்டிலில் மட்டு மல்ல காமம்' எனக் கவிதையை முடிக்கின்றார். சின்னச் சின்னச் செயல் பாட்டிலும் ஆனந்தம் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட 'ஒரு' என்னும் சொல்லாட்சியை மீண்டும் மீண்டும் பயன் படுத்தியுள்ளார்

**முரண்:** கவிஞர் கவிதைகளில் முரண்களைப் பயன் படுத்தியுள்ளார். 'சரஸ்வதியின் இருட்டு வெளிச்சமும் வெளிச்ச இருட்டும்' (ப.76) என்னும் கவிதைத் தலைப்பை முரணில் அமைத்த தோடு 'பின் நோக்கினாள், முன் நோக்கினாள்' எனவும் 'நேற்றும்

அதுவாக, இன்றும் அதுவாக' எனக்கவிதைக்குள்ளும் முரண்களைக் கையாண்டுள்ளார்.

**இயைபு:** இறுதி எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடையாகும். 'சரஸ்வதியின் கேள்வி' என்னும் கவிதையில் அலை பேசியில் மூழ்கிக்கிடப்பதால் இயல் பானவாழ்க்கை வாழ்வதில்லை என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில்

"நேசமாய் ஒற்றைப் பார்வை
மௌன மாய் ஒற்றை வார்த்தை
நேர்மையாய் ஒற்றைப் புன்னகை" (ப.41)

என 'ஐ' விகுதி இயைந்து வரும் வகையில் கவிதை அமைந்துள்ளது. மேலும் ஞாயிற்றுக் கிழமை குறித்துக் கூறும் போது "நிதானமானசுவாசமும் நிதானமானபூவாச மும்நிதாமானவானமும்" (ப.39) எனவரிசையாக 'உம்' என்னும் விகுதியை இயைந்துவரச் செய்துள்ளார்.

**கருத்துப் புலப்பாட்டாளுமை:**

கவிஞர் தன்னம்பிக்கை மேம்பாடுகளையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் நடப்பியல் சிக்கல் களையும் பாடு பொருளாக்கியுள்ளார். கவிஞரிடம் ஹைக்கூகவிதையைப் போன்று தான் எடுத்துக் கொண்ட கவிதைப் பொருளைக் கவிதை நெடுக எடுத்துச் சென்று ஒரு முடிவுரைதருவது போல இறுதியில் கவிதையின் முழுப் பொருளையும் தருகின்ற பாங்கைக் காண முடிகின்றது. பெண் ஆற்றலோடு திகழ்கின்றாள் என்பதை வெளிப்படுத்த 'சிறகு' என்பதைக் குறியீடாக்கியுள்ளார். பெண் ஒவ்வொரு நாளும் ஆற்றலோடு செயல் படுகிறாள். சிறகு முளைத்த பறவையாகப் பறந்து கடமையாற்றுகின்றாள். அவளுக்கு "இறக்கை தோளில் இல்லை மனசில் இருக்கிறது" (ப.36) எனப் பெண்ணின் மனவேகத்திற்கும் செயலாற்றலுக்கும் காரணம் அவளது ஆற்றல்வாய்ந்த மனமே காரணம் எனக் கவிதையை முடிக்கின்றார்.

மேலும் ஒவ்வொரு நாளும் இவ்வுலகம் புதுமையோடுகை கோர்த்துச் செல்கிறது. மனிதர்களின்மனப்பாங்கும்மாறிக்கொண்டேசெல்கிறது. நேற்று இருந்த எண்ணம் இன்றில்லை. ஆடை அலங்காரம் நேற்று இருந்தது போல் இன்றில்லை. ஒவ்வொருநாளும் மாறிக் கொண்டே இருக்கிறது. இதனைக் கவிஞர் 'சரஸ்வதி பார்த்த நேற்று' என்னும் கவிதையில் 'நேற்றுப் பார்த்த மேகம், மழை, வெயில், காற்று ஆகியவற்றைக் காண வில்லை இன்று. நேற்றுப் பார்த்த அந்த நேற்றைக் காணவில்லை. நேற்றுப் பார்த்த சரஸ்வதியையும் காணவில்லை இன்று எனக் கூறி நிறைவாக நேற்றுப் பார்த்த எதையும் இன்று காண இயலவில்லை' என்பதைப்புலப் படுத்தும் விதமாக



© 2022, IRJTSR 

"உன்னையும் என்னையும்
யாரையும்" (ப.24)

எனக் கவிதையை முடிக்கின்றார். இன்றைய சூழலில் வாழ்க்கை நிலைப்பாடு ஒவ்வொருநாளும் மாறிக் கொண்டே வருவதை அனுவப்பூர்வமாகப் புரியவைத்துள்ளார்.

தொழில் நுட்ப வளர்ச்சி நம்முடைய வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. அதிலும் குறிப்பாக அலைபேசி அருகில் இருப்பவர்களோடு நேசம் கொள்ளுதலை மறக்கச் செய்துள்ளது. அதனை வெளிப்படுத்தும் நோக்கில் 'சரஸ்வதியின் கேள்வி' எனும் கவிதை அமைந்துள்ளது.

"யாவரும் அன்பு செய்வது
அருகிருப் பவரோடு அல்ல
தொடர்பு எல்லைக்கு
அப்பால் இருப்பவரோடு தான்
--------------------------------------------
ஏது மின்றி இருப்பதற்குப் பெயர்
இருப்பா? இறப்பா?" (ப.41)

'நேசமாய் ஒற்றைப் பார்வை, மௌனமாய் ஒற்றைவார்த்தை, நேர்மையாய் ஒற்றைப்புன்னகை ஏது மின்றி இருப்பதற்குப் பெயர் இருப்பா? இறப்பா?' எனக் கேள்வியாகக் கேட்பது ஒவ்வொருவரும் தாங்கள் செய்யும் தவற்றைத் திருத்திக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. இறுதிவரிகள் கவிதையின் மையப் பொருளை எடுத்துரைப் பதாக உள்ளன.

இயற்கைவளம் துண்டாடப் படுவதை 'இனி கூறு போடலாம் வானத்தை, குடுவையில் அடைத்து விற்கலாம் வெயிலை, சுரண்டலாம் நட்சத்திரங்களை' எனத் தொடங்கும் இக்கவிதையில் தீயவழியில் அளவுக் கதிகமாகச் சொத்துச் சேர்க்க நினைக்கும் மனித எண்ணங்களைப் புலப்படுத்தியுள்ளார். இவ்வெண்ணங்களை மாற்றும் நோக்கில் இயற்கையின் வழியிலேயே பதிலும் உரைக்கின்றார்.

"நிரம்பியவயிறு ஏற்காது
அதிகமாக ஓர் உருண்டை சோறு
கிளம்பிய உயிரும் ஏற்காது
அதிகமாக ஒருநிமிட வாழ்வு" (ப.43)

இக்கவிதைவரிகள் வாழ்வின் நிலையாமையை உணர்த்தி மனிதனை நேரியவழியில் செலுத்து வதற்கு முனைந்துள்ளன.

## தொகுப்புரை:

- கவிஞர் பொது மரபைச்சார்ந்த வழக்குக் குறியீடுகளைப் பயன் படுத்தியுள்ளார்.
- தொன்மம், சமயம், இலக்கியம், வாழ்க்கை சார்ந்த குறியீடுகள் பயன் படுத்தப்பட்டுள்ளன.
- அணிநயம் கவிதைக்கு அழகுசேர்க்கும் வகையில் உவமையணி, புகழாப் புகழ்ச்சியணி ஆகிய அணிகள் பயன் படுத்தப்பட்டுள்ளன.
- மோனை, எதுகை, முரண், இயைபு முதலிய தொடை நயங்களைக் கவிஞர்கையாண்டுள்ளார்.
- சொல்லவரும் கருத்தைப் படிப்பவர் உள்ளங்களில் ஒரு விதத்தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இறுதிவரிகளில் கவிதையின் முழுப்பொருளும் வந்தமையும் விதத்தில் அமைத்துள்ளார்.
- ‘சரஸ்வதியின் ஆயுத எழுத்து’ பெண்ணின் மனம் சார்ந்து மட்டுமல்ல, அரசியல், இயற்கைச் சுரண்டல், உழவுத் தொழிலைப் புறந்தள்ளுதல், தொழில் நுட்பத்தில் மனிதமனம் மூழ்கிப் போதல் எனப்பலவகைக்கலப் புக்களின் கலவையாக இக்கவிதை நூல் அமைந்துள்ளது.

## முடிவுரை:

ஆண்டாள் பிரியதர்ஷினி கவிதையின் பாடு பொருளை வெளிப்படுத்து வதற்கு வழக்கில் உள்ள குறியீடுகளைப் பயன் படுத்தியுள்ளார். கவிதைகளில் தொடை நயங்களையும் அணிநயங்களையும் பயன் படுத்தி எழுத்தாளுமையை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் ஒவ்வொரு கவிதையின் இறுதிவரிகளை முடிவுரையாக அமைத்திருப் பதுபடிப்பவரது உள்ளங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக உள்ளன. இதனால் கருத்துப் புலப்பாட்டாளுமையில் தலைசிறந்து விளங்குகின்றார். சரஸ்வதி கல்வியின் வடிவமாகக் காணப்படுகிறாள். கல்வி அறிவின் வெளிப்பாடு. அறியாமையை அகற்றும் ஊன்று கோல். அத்தகைய கல்விக்கடவுளைமையப் படுத்தி, கவிஞர் ‘சரஸ்வதியின் ஆயுத எழுத்து’ என்னும் நூலை உருவாக்கியுள்ளார். இந்நூலில் பெண்ணின் மனநிலை மட்டுமல்ல அரசியல், இயற்கை, உழவு, தொழில் நுட்ப வளர்ச்சியால் ஏற்பட்ட மாற்றம் என சமுதாய நிலைப் பாடுகளைப் பாடு பொருளாக்கியுள்ளார். சமுதாயம் சார்ந்த செய்திகள் ஆண்களுக்கானது என்னும் போர்வையைத்தகர்த் தெறியும் விதத்தில் சரஸ்வதி என்னும் பெண் பெயரைமையப்படுத்தி ‘சரஸ்வதிக்குத் தெரியுமா வெனத்தெரியவில்லை’,

'சரஸ்வதியின் டிவிட்டர்', 'சரஸ்வதியும் ஏதோவும்' எனக்கவிதையின் தலைப்பை அமைத்துப் பெண்களை முதன்மைப் படுத்தியிருப்பது கவிதை உருவாக்கத்தில் அவரது தனித்தன்மையை வெளிப்படுத்துகின்றது.

## துணைநூற்பட்டியல்:


[1] அப்துல்ரகுமான், புதுக்கவிதையில்குறியீடு, அன்னம், தஞ்சாவூர், இரண்டாம்பதிப்பு: ஆகஸ்டு,2015.

[2] ஆண்டாள்பிரியதர்ஷினி, சரஸ்வதியின்ஆயுதஎழுத்து, குமரன்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு : பிப்ரவரி,2013.

[3] மணிமேகலை,ச., கவிஞர்மீராவின்படைப்பும்ஆளுமையும், அன்னம், தஞ்சாவூர், முதற்பதிப்பு : ஜூன், 2009.

[4] மணிமேகலை,ச., வைரமுத்துகவிதைகள்பன்முகப்பார்வை, அன்னம், தஞ்சாவூர், முதற்பதிப்பு : அக்டோபர்,2009.

[5] ரகுநாதன்,எம்.ஆர்., தமிழ்க்கவிதைகளில்பெண்கள்(சங்ககாலம்முதல்தற்காலம்வரை), செண்பகாபதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு,2014.